**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் – 53/2024**

**வாதி தரப்பு சாட்சி–2 முத்து** – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 23.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்து | கிராமம் | |
| த/பெ / க/பெ. | பெரியசாமி | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 58 |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | |
|---|---|---|
| 1. | எனது ஆதார் அட்டை – அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் | வா.சா.ஆ.13 |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:</u>**

1) எனக்கு எழுதப் படிக்க தெரியுமா என்றால் தெரியாது. கையெழுத்து மட்டும் போடுவேன். எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு யார் தாக்கல் செய்துள்ளனர் என்ற விபரம் தெரியுமா என்றால் காமாட்சி என்பவர் போட்டுள்ளார். யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆகாஷ் மற்றும் 5 நபர்கள் பேரில் போட்டுள்ளார். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் காமாட்சி பெயரில் உள்ளது. அதை நான் பார்த்தேன். காமாட்சிக்கு 5 குழந்தைகள். எனக்கு 1மகன், 1 மகள் உள்ளனர். எனது மகளைத்தான் காமாட்சியின் மகனுக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம். காமாட்சி எனக்கு சம்மந்தி என்றால் சரிதான்.

2) என்னை காமாட்சிதான் சாட்சி சொல்ல அழைத்து வந்தாரா என்றால் ஆமாம். தாவா சொத்து சம்பந்தமாக ஏற்கெனவே வழக்கு நடந்த அய்யண்ணன் செட்டியார் என்பவர் ஏலத்தில் எடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

அய்யண்ணன் நீதிமன்றம் மூலமாக சுவாதீனம் எடுத்துக் கொண்டாரா என்றால் இல்லை. அய்யண்ணன் செட்டியார் பேரில் ஏற்பட்ட நீதிமன்ற ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் இல்லை. அய்யண்ணன் செட்டியார், வெள்ளைச்சாமி என்பவருக்கு சொத்தை விற்றுள்ளாரா என்றால் இல்லை. வெள்ளைச்சாமி பெயரில் தாவா சொத்திற்கான பட்டா, பத்திரம் உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தை கிரையம் பெற்ற பின்னிட்டு வெள்ளைச்சாமிதான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல, காமாட்சிதான் அனுபவம் செய்து வருகிறார். வெள்ளைச்சாமி இறந்துவிட்டாரா என்றால் ஆமாம்.

3) வெள்ளைச்சாமிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் அதுபற்றி தெரியாது. வெள்ளைச்சாமிக்கு அவரது மனைவிகள் லலிதா, ராதா ஆகியோரும், சியாமளா, முகில், ஆகாஷ் ஆகிய வாரிசுகளும் உள்ளனர் என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக காமாட்சி பெயரில் ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. என்ன ஆவணங்கள் உள்ளது என்றால் நான் படித்து பார்க்கவில்லை. காமாட்சி பெயரில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். காமாட்சிக்கு உரிமை ஆவணங்களை யார் ஏற்படுத்திக் கொடுத்தது என்றால் அதுபற்றி தெரியாது. காமாட்சியைத் தவிர தாவா சொத்திற்கு வேறு யார் பெயரிலும ஆவணம் ஏற்படவில்லை என்றால் சரிதான். எனக்கு தாவா சொத்தைப் பற்றியோ, அதன் உரிமையாளர்களைப் பற்றியோ எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. 4ம் வாதி எனது மருமகன். நான் வாதிகளுக்கு பெண் கொடுத்திருப்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காமாட்சி சொல்லி தயார் செய்த பிரமாண வாக்குமூலத்தில் அதன் விபரங்கள் தெரியாமல் நான் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**